## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.243/2022

## சாட்சியின் சான்றுரை PW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | காளியப்பன் | வட்டம் | - | |
| த/பெ | - | ராமகிருஷ்ணன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

09.02.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கம்பி கட்டும் வேலை செய்கிறேன். நான் பாண்டிச்சேரியில் டவுனில் வசிக்கிறேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் வாதி 1 மற்றும் 3ம் பிரதிவாதிகளை தெரியும். கனகவள்ளி என்பவர் கஸ்துாரியின் அக்கா ஆவார். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் கொங்கரெட்டிபாளையத்தில் உள்ளது. சொத்தை பற்றி நேரடியாக தெரியாது. ஆனால் இருக்கும் இடம் தெரியும். வாதியின் கணவர் பெயர் முருகன். அவர் உயிரோடு உள்ளார். அவர் சொல்லி தான் வழக்கு விவரம் தெரியும். அவர் என் நண்பர். அவர் 10 வருடத்திற்கு முன்பே சொல்லியுள்ளார். சொத்து விவரத்தை பற்றியும் அவர்களுக்குள்ளான வழக்கு பிரச்சனை பற்றி பேசியுள்ளார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை. முருகன் என்பவர் படித்து காட்டி அதில் நான் கையெழுத்து போட்டேன். பாண்டிச்சேரியில் என்னிடம் சொல்லி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. வழக்கிறிஞர் அலுவகத்தில் நான் கையெழுத்து போட்டேன். அவரது அலுவலகத்தில் தட்டச்சு செய்து வைத்திருந்தார்கள் என்றால் ஆம். பிரமாண வாக்குமூலத்தில் முருகன் சொல்லி தான் எனக்கு விவரம் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆம்.

எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் முருகன் மூலமாக தெரிந்துகொண்டு சொல்வதால் எனது சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல. நான் முருகன் என்பவர் என் நண்பர் என்பதால் அவருக்கு சாதகமாகவும் வாதிக்கு சாதகமாகவும் தவறாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது உண்மை இல்லை என்றும் அவை அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.